# திருவண்ணாமலை, கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.ப.இளங்கோவன்

உதவி இயக்குநர்

ந.க.எண்.1725/2020/அ நாள் : 26.08.2021

பொருள்: நிர்வாகம் – கைத்தறி மற்றும் துணிநூல் துறை, திருவண்ணாமலை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கு தொகுதி 4 (Group –IV) இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான தேர்வு நடத்தப்பட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணியமர்த்தப்பட்ட திருமதி.எம்.நதியா, இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.2380/PSD–I/2020, நாள்.30.05.2020.
2. கைத்தறி இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், ந.க.14680/2020/இ2–8, நாள்.14.08.2020.

– – –

**ஆணை:**

பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கு தொகுதி 4 (Group –IV) இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான தேர்வு நடத்தப்பட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, இத்துறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருவண்ணாமலை சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பணியமர்த்தப்பட்டுள்ள திருமதி.எம்.நதியா, இளநிலை உதவியாளரின் பணியானது, மேற்படி தமிழ்நாடு அரசு பணியார் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, கலம் எண்.4–ல் குறிப்பிட்டுள்ள நாள்முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணிநிலையில் வரன்முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திருமதி.எம்.நதியா | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |

2) மேற்காணும் தனியரின் பணி நியமனம் மற்றும் பணி வரன்முறைபடுத்துதல் என்பது 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அமைச்சு பணிகளுக்கான தொகுதி 4 (Group – IV) தேர்வு தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையிலுள்ள ரிட்/சீராய்வு மனுக்களின் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண்.2–காணும் தனியரது தகுதிகாண் பருவமானது இளநிலை உதவியாளர் பணிநிலையில் கலம் எண்.4–ல் காணும் நாள் முதல் தகுதி காண் பருவ தொடக்க நாளாக கணக்கிடப்பட்டு ஆணையிடப்படுகிறது. மேலும் மேற்கண்ட தனியர் மூன்றாண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

உதவி இயக்குநர்
கைத்தறி மற்றும் துணிநூல்
திருவண்ணாமலை

26/08/2021

**பெறுநர் :**

திருமதி.எம்.நதியா, இளநிலை உதவியாளர்,
கைத்தறி மற்றும் துணிநூல்,
திருவண்ணாமலை சரகம்.

**நகல் :**

1. முதன்மை செயலர்/கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பணிப்பதிவேடு
3. இருப்புக்கோப்பு